ஆண்டாள் அருளிச் செய்த
நாச்சியார் திருமொழி

ஒன்பதாம் திருமொழி - சிந்துரச் செம்பொடி
திருமாலிருஞ்சோலை அழகரை வழிபடுதல்

** சிந்துரச் செம்பொடிப் போல் * திருமாலிருஞ்சோலை எங்கும் *
இந்திர கோபங்களே * எழுந்தும் பரந்திட்டனவால் **
மந்தரம் நாட்டி அன்று * மதுரக் கொழுஞ்சாறு கொண்ட *
சுந்தரத் தோள் உடையான் * சுழலையில் நின்றுய்துங்கொலோ? 1

போர்க் களிறு பொரும் * மாலிருஞ்சோலை அம்பூம்புறவில் *
தார்க்கொடி முல்லைகளும் * தவள நகை காட்டுகின்ற **
கார்க்கொள் படாக்கள் நின்று * கழறிச் சிரிக்கத் தரியேன் *
ஆர்க்கிடுகோ? தோழீ! * அவன் தார் செய்த பூசலையே 2

கருவிளை ஒண்மலர்காள்! * காயா மலர்காள்! * திருமால்
உருவொளி காட்டுகின்றீர் * எனக்கு உய்வழக்கு ஒன்றுரையீர் **
திரு விளையாடு திண் தோள் * திருமாலிருஞ்சோலை நம்பி *
வரி வளையில் புகுந்து * வந்தி பற்றும் வழக்குளதே 3

பைம்பொழில் வாழ் குயில்காள்! மயில்காள்! * ஒண்கருவிளைகாள்! *
வம்பக் களங்கனிகாள்! * வண்ணப் பூவை நறுமலர்காள்! **
ஐம்பெரும் பாதகர்காள்! * அணி மாலிருஞ்சோலை நின்ற *
எம்பெருமானுடைய நிறம் * உங்களுக்கென் செய்வதே? 4

துங்க மலர்ப் பொழில் சூழ் * திருமாலிருஞ்சோலை நின்ற *
செங்கட் கருமுகிலின் * திருவுருப் போல் ** மலர் மேல்
தொங்கிய வண்டினங்காள்! * தொகு பூஞ்சுனைகாள்! * சுனையில்
தங்கு செந்தாமரைகாள்! * எனக்கோர் சரண் சாற்றுமினே 5

** நாறு நறும் பொழில் * மாலிருஞ்சோலை நம்பிக்கு * நான்
நூறு தடாவில் வெண்ணெய் * வாய் நேர்ந்து பராவி வைத்தேன் **
நூறு தடா நிறைந்த * அக்கார அடிசில் சொன்னேன் *
ஏறு திரு உடையான் * இன்று வந்திவை கொள்ளுங்கொலோ 6

இன்று வந்து இத்தனையும் * அமுது செய்திடப் பெறில் * நான்
ஒன்று நூறாயிரமாக் கொடுத்துப் * பின்னும் ஆளும் செய்வன் **
தென்றல் மணம் கமழும் * திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்ற பிரான் * அடியேன் மனத்தே வந்து நேர் படிலே 7

காலை எழுந்திருந்து * கரிய குருவிக் கணங்கள் *
மாலின் வரவு சொல்லி * மருள் பாடுதல் மெய்ம்மை கொலோ? **
சோலை மலைப் பெருமான் * துவராபதி எம்பெருமான் *
ஆலின் இலைப் பெருமான் * அவன் வார்த்தை உரைக்கின்றதே 8

கோங்கலரும் பொழில் * மாலிருஞ்சோலையில் கொன்றைகள் மேல் *
தூங்கு பொன் மாலைகளோடு * உடனாய் நின்று தூங்குகின்றேன் **
பூங்கொள் திருமுகத்து * மடுத்தூதிய சங்கொலியும் *
சார்ங்க வில் நாண் ஒலியும் * தலைப்பெய்வது எஞ்ஞான்று கொலோ 9

** சந்தொடு கார் அகிலும் சுமந்து * தடங்கள் பொருது *
வந்திழியும் சிலம்பாறுடை * மாலிருஞ்சோலை நின்ற
சுந்தரனை ** சுரும்பார் குழல் * கோதை தொகுத்துரைத்த *
செந்தமிழ் பத்தும் வல்லார் * திருமால் அடி சேர்வர்களே 10

ஆண்டாள் திருவடிகளே சரணம்